# சென்னிமலைகளில் செவ்வேலவன்

**D. சங்கீதா, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
செந்தமிழ்க் கல்லூரி, நான்காம் தமிழ்ச் சங்கம்
தமிழ் உயராய்வு மையம், மதுரை

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5004

***ஆய்வுச்சுருக்கம்***

*சென்னிமலை கொங்கு நாட்டில் உள்ள முருகனுக்குரிய குன்றுதோறடல். திருமலைகளில் ஒன்றாகும். இது கொங்கில் பூந்துறை நாட்டைச் சார்ந்து விளங்குவது. மேருமலையின் கொடு முடிகளில் ஒன்றே சென்னிமலையாம் என்பது தல வரலாறு. இம்மலைமேல் முருகன் இளமைக்கோலம் பொலிய அடியவர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களைத் தந்தருளுகின்றார். உத்தண்டவேலர், முத்துக்குமரன் என்பன இப்பெருமானுடைய திருநாமங்கள், புட்பகிரி சிரிகிரி சிகரகரி என்பன இம்மலையின் வேறு பெயர்கள். பச்சிதீர்த்தம், மாமாங்கதீர்த்தம், நிறுதிதீர்த்தம், சரவண பொய்கை முதலியன இத்தலத் திற்குரிய தீர்த்தங்கள். இத்தலத்தில் முருகனைப் பூசித்துப் பேறுபெற்றோர். இடும்பன் சக்தி முனிவர், சரவணமுனிவர், மார்க்கண்டேயர், முதகுந்தச் சோழன், பிண்ணாக்குச் சித்தர் முதலியோர். இம்மலையையடுத்துள்ள நகரம் கமலாலயம் காளிநகர் திருவிருந்தை நகர் எனப் பெயர் பெறும். மலைகாவலனாக இம்மலையின் முதற்படியில் வீற்றிருப்பவன் இடும்பன். அவன் முதற் பூ பெற்ற விளங்குபவன், இடும்பன் காவடியில் ஓர் தட்டில் முருகப் பெருமானையும், மற்றொரு தட்டில் வள்ளி தெய்வயானையாரையும் எடுத்துப் பின் பூமியில் வைத்து வழிபட்டனன். தைப்பூசத் தேர்த்திருவிழா இத்தலத்தில் மிகவும் சிறப்பானது. தலபுராணமும், காதல் பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களும் உலக மக்களே போற்றிப் புகழும் கந்த சஷ்டி கவசம், எனும் இனிய தீந்தனுபனுவல். எந்த வினையானாலும் கந்தனின் சஷ்டியின் முன்னே காணாமல் போகும்படி செய்த பனுவில், அரங்கேறிய இடம். வடசென்னிமலை அருள்மிகு பாலசுப்பிரமணியம் திருக்கோயில் சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ளது. முருகன்கோயில் சுமார் 300 ஆண்டுகள் பழமையானது. வடமதுரை, என்ற ஊரைச் சேர்ந்தவர் அப்பன்ன சுவாமிகள், வைணவத்தின் மீது அதீத பற்றுக்கொண்டவர், இருப்பினும் வடசென்னிமலையில் சுயம்புவாகக் காட்சி கொடுத்த முருகன் மீதும் அளவுகடந்த பற்று வைத்திருந்தார். அவர் பிரதிஷ்டை செய்த சிலையே வடசென்னிமலை ஆண்டவர். கொங்கு நாட்டில் வடசென்னிமலை ஆண்டவர், தென்பகுதியில் தென்சென்னிமலை ஆண்டவர் என இரண்டு கோயில்கள் சென்னிமலை என்னும் பெயரில் அமைந்து மக்களுக்கு வேண்டும் வரங்களைத் தந்து அருள்பாலிக்கிறார். சென்னிமலையாண்டவர் திருவருளுக்கு உடையவர்களாய் இத்தலத்தில் வாழ்ந்து மலைமீதும் அடிவாரத்திலும் பல திருப்பணிகளைச் செய்து முருகப் பெருமான் திருவருளில் கலந்தவர்கள், செங்கத்துரைப் பூசாரி, வேட்டுவபாளையம் பூசாரி, இக்கோயிலாண்டவருக்கு திருப்பணிகள் செய்தனர்.*

*சோழ மன்னர் திருக்கடலூரிலிருந்து தெய்வசிகாமணியார் என்ற திருமறையவரை இவ்வூருக்கு அருகிலுள்ள பிடாரியூர் என்னும் இடத்தில் குடியேற்றினார். இப்பரம்பரையில் வந்த பெயர் பெற்று விளங்கும் வடமொழி, தென்மொழி வல்லுனரான மகாமகோபாத்தியாய ஈசான சிவாச்சாரியார் அவர்களை நாடு நன்கறியும். சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகில் உள்ளது. வடசென்னிமலை கோயிலில் பாலகனாகவும், வள்ளி தெய்வானையுடன் திருமணக் கோலமும், முதிர்பருவனாகவும் காட்சி கொடுக்கும் அபூர்வதலம். சென்னிமலை பிள்ளைத்தமிழ், சென்னி மலையாண்டவர் காதல், சென்னிமலை யமஹவந்தாதி, மேழி விளக்கம் முதலியன நூல்கள் இத்தலத்தைப் பற்றியனவே. பிள்ளைத் தமிழை இயற்றியவர் வெள்ளோடு குந்தாணி, சாமிநாதப்புலவர், என்பவர் இயற்றினார். இவ்வாய்வில் இரண்டு கோயில்களின் சிறப்புகள், வழிபாடு, காலம், பாடல் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறனறிச் சொற்கள்:*** *சென்னிமலை, கோயில், முருகன், சஷ்டி*

## முன்னுரை

சைவத்திருமுறைகள், சைவ புராணங்களுள் சொல்லழகாலும் பொருட்பொலிவாலும், நடைச்சிறப்பாலும் பொலிவும் பெற்றுவிளங்குவன. பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் என்ற மூன்றாம் சிவபெருமானுடைய முச்சுடர் விழி போன்று முதன்மை பெற்று விளக்குவனவாகும்.

முருகப்பெருமான் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கனவில் தோன்றி, “அன்பனே நம்மைத் தமிழில் பாடுவாயாக” எனப் பணித்தருளி “திகடசக்கர” என்று முதலும் எடுத்துக்கொடுத்து மறைந்தருளினார். அதன்படியே அவர் பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு விருத்தப்பாக்களால் பாடி முடித்தனர் என்பது வரலாறு. இது முருகக் கடவுளின் திருவவதார வரலாறும், சூரபன்மன் சிவபெருமானிடம் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு, யுகம் வரை ஆட்சிபுரியும் பெருவரம் பெற்றுத் தேவர்களைச் சிறை செய்த வரலாறும் சண்முகக் கடவுள் சூரபன்மனுடன் போர்புரிந்து வென்று ஆட்கொண்ட வரலாறும், தேவர் சிறைநீக்கி அவரை விண்குடி ஏற்றிய வரலாறும், முருகக் கடவுள் தெய்வயானை வள்ளியம்மை இவர்களைத் திருமணம் புரிந்தருளிய வரலாறும் பிறவும் கூறுவதாகும்.

## சென்னிமலை தலத்தீர்த்தங்களின் சிறப்பு

சென்னிமலை ஆண்டவர் சுப்பிரமணியர், சென்னிமலையில் ஐக்கியங் கொண்டுள்ள பிண்ணாக்குச் சித்தருக்கும் ஆண்டவர் உத்தரவின் பேரில் காஞ்சியிலிருந்து சென்னிமலைத் தலபுராண வடமொழிச் செப்பேட்டிலிருந்து கண்டு கொண்டு வந்தவரும் ஆதிசைவ அந்தணரும் ஆகிய சரவண மாமுனிவருக்கும் தமது பேரின்பத் திருந்தாண்டவத்தை ஆடிக்காட்டியருளியவராவார். இம்மூர்த்தி தற்போழ்து விளங்கும் திருக்கோயிலுக்குப் பின்புறத்தில் வள்ளித் தெய்வானையருடன் இலிங்கத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ளார்.

வாயுபகவானால் பூமியில் வீழ்த்தப் பெற்றமேருமா மலையின் சிகரங்களுள் ஒன்றும் ஆகும்.

சென்னிமலை மூர்த்தி தலந்தீர்த்தங்களின் சிறப்பு அளவிடற்கரியது. இது கிருதயுகத்தில் மகாவிட்டுணுவால் பூசிக்கப் பெற்றது மகுடகிரி என்னும் பெயரானது இதில் உள்ள தீர்த்தம் சிவகங்காதீர்த்தம் எனப்பெறும். திரேதயுகத்தில் மகாலக்குமியால் பூசிக்கப் பெற்றது. கனககிரி என்னும் பெயரினது அத்தீர்த்தம் குமார தீர்த்தம் எனப் பெறும். துவாபரயுகத்தில் அட்ட துர்க்கைகளால் பூசிக்கப் பெற்றது. புட்பகிரி என்னும் பெயரினது அத்தீர்த்தம் சண்முகதீர்த்தம் எனப்பெறும்.

இக்கலியுகத்தில் பல தேவர்களாலும், அகத்திய முனிவர் பிண்ணாக்குச் சித்தர். சரவணமுனிவர் முதலிய அறிவறிந்த பெரிய கௌமாரர் பலராலும் பூசிக்கப் பெற்றது. மாமசத் தீர்த்தம் அல்லது மாமாங்க தீர்த்தம் என வழங்கி வருகிறது. இது பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை தவறாமல் பொங்கும். இக்கிரியில் காணச்சுனை, கருநொச்சி, வெண்சாரை, பொய்யாத மாமாங்கத் தீர்த்தம், பலவிதமான மூலிகைகள், அற்புதம், வாய்ந்த சஞ்சீவிகள் உடையது.

இத்தலம், விநாயகர், இமையவல்லி, மார்க்கண்டேயன், முதலிய மூர்த்தங்களைத் திருக்கோயிலின் உட்பிரகாத்தில் கொண்டு மிளிர்கின்றது.

### படிக்காசுப் பெற்ற தலம்

இத்தலத்தில் ஸ்ரீஅருணகிரியார் திருப்புகழ் பாடிப் படிக்காத காசு பெற்றிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னிமலையாண்டவர் பழனி ஆண்டவரைப் போலவே அளவிலாத தொண்டர் கோடிகட்குத் திருவருள் பாவிக்கும் தெய்வமாகியும் பொதுச் சிறப்பு வகையில் கொங்கு வேளாண் மரபினருக்குக் கண்கண்ட கடவுளாகவும் விளங்குகிறார்.

### வெண்பா

***சென்னிமலைக் கோயிற் சிவகுகன்செம் பூந்தாளில்***
***மன்னிசைவி ருத்தப்பா மாலைசந்தம் - இன்னிடங்கால் 1- அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்***
***சென்னிமலை யாண்டவன் சேவடிக்கு மாண்விளவை***
***மன்னுமருதா சலக்கவிஞன் - சொன்ன***
***சந்தமுடன் மாலை தகுந்தவெண்பா வந்தாதி***
***செந்தமிழின் பார்ந்தபத்தித்தேன்2***
***(பிரம்மஸ்ரீ க. பத்மநாப ஐயர்)***

### சென்னிமலை ஆண்டவரின் பிள்ளைத்தமிழ்

***மானென விழித்துத் தேனென மொழிந்து மடந்தையர்***
***கலக்கிய மனத்தில் கோனென வந்து மின்னொளி பரப்பிக்"4***
***காப்பு பருவத்தில் எம்பெருமானை பாடி பரவசமடைகிறார்.***

### செங்கீரை பருவம்

***மலைகளுக்கரசே வேலினுக்கரசே வள்ளிகுங் சரியருக்கிரசே,***
***கலைகளுக்கரசே ககனருக்கரசே கார்மயில் சேவலுக்"5 (24)***

### தால்

***வண்டமிழி மொழிபல தழைப்ப மாமறை யாகமத்***
***தழைப்ப, வெண்டரு நீற்று லுருத்திராக் கத்தால் வென்'6 (30)***

### முத்தம்

***தனமுகை பிடித்து நறவிதழ் கடித்துந் தடவல்குற்படை7 (59)***

### வாரானை

***தேனெனக் கருப்பஞ் சாறென வினிக்குஞ் செழுந்***
***தமிழ்த் திருப்புகழ் பாடும், கோனெதிர் சென்று செபணி8 (8)***

### அம்புலி

***வாயிசை பாட மனமுனை நாட மணமலர் பறித்தரு***
***சித்துக் கோயிலை வலஞ்சூழ்ந் தடிபடிந் தெழுவார் குழு9 (73)***

### சிற்றில்

***சாத்திரம் படித்தேன் பூத்திரன் குவித்தேன் சற்று***
***மென் மனக்குரங் கடங்கா, தாத்திரத் தலைந்து குதித்திட10 (87)***

### சிறுபறை

***அரசுர முருகா லயின்மயி லரசே யமரனே குமரனே***
***யென்று பரவடி யவர்த்தோட் காவடி பலவும் பரிந்து கொண்11 (91)***

சிறுதேர்

அடியவர் திருக்கூட் டஞ்செய முழங்க வருணையன்

றிருப்புகழ் முழங்கக், கொடியவ ரசுரத் குலத்தொடுமடியக்12 (94)

வேந்தனே சென்னிமலை வேட்டவனே கன்னிவள்ளி

காந்தனே கந்தக் கடவுளே - சாந்தனையும்"[13]

(34)

சென்னிமலைப் பிரபந்தங்களும் சிவமலைப் பிரபந்தங்களும் கவுண்டர்களது புலமையை விளக்குதற்கல்லாமல் செவ்வேளின் அருட்பெருஞ் திறமையையே விளக்கப் போந்தனவாதலால் இரண்டு கோயில்களின் பாடல்களை மருதாசல கவுண்டரவர்கள், குகனிடத்தில் மாறாத காதலும், அன்பும் கொண்டு நான்கு நாளில் ஆக்கிய இந்த சென்னிமலை ஆண்டவர் மீது பிள்ளைத் தமிழும் பத்து பருவங்களாகப் பக்தியோடு பாடியுள்ளார்.

தல வரலாறு

சென்னிமலை திருக்கோயில் சுமார் 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரார்த்தனை சிறப்புமிக்க கோயில் சிவாலயச் சோழர் மன்னர் காலத்தில் கட்டப்பட்டது. தலபுராணத்தில் 23 மான்மியங்களும், 667 திருவிருத்தங்களும் உள்ளன.

சரவண முனிவர்

பிரம்மச்சரிய முதலிய நிலைகளில் நின்று துறவியாகிய இக்கோயில் வரலாறு அறிய காஞ்சிபுரம் சென்று அங்கு வாழ் மறையவர்களிடம் செப்பேட்டிலிருந்து சிரகிரி வரலாற்றை அறிந்திருந்து அதனை வேறு செப்பேட்டில் எழுதிக் கொண்டு சென்னிமலைக்கு வந்து அதில் எழுதியுள்ள மகிமைகள் அனைத்தையும் சென்னிமலை மேற்கண்டு மகிழ்ந்தார். முருகன் தனது ஆறுமுக வடிவமும், ஒருமுக வடிவமுமாக காட்சி அருளினார். பல்வேறு திருப்பணிகள் செய்து பின்னர் சென்னிமலை வேலவர் திருவடிகளை அடைந்தார்.

"மூவருள் மூவர் முதலே சரணம்
முகில் வண்ணன் மருகா முருகா சரணம்
கூவிய காலாயுதனே சரணம்
குலவு கை வேலாயுதனே சரணம்
மாஇரு கூறாய் வகித்வாய் சரணம்
மலைமுனி இருவாய் வருவாய் சரணம்
வேதர்கள் சேனாபதியே சரணம்
சிரிகிரி வாழ்வே சரணம் சரணம்"[15]

(தலபுராணப்பாடல்)

புராண வரலாறு

அனந்தன் என்ற நாகார்ஜுனனுக்கும், வாயு தேவனுக்கும் பலபரிட்சை நடந்தது. அனந்தன் மகாமேரு பருவதத்தை சுற்றிப் பிடித்துக் கொள்ள வாயு தேவன் கடுமையாக வீசி ஆனந்தன் பிடியிலிருந்து மேரு மலையை விடுவிக்க, முயன்றார். அப்போது மேருவின் சிகரப்பகுதி முறிந்து பறந்து சென்று பூந்துறை நாட்டில் விழுந்தது. அதுவே சிரகிரி, சிகரகிரி, புஷ்பகிரி, மகுடகிரி, சென்னிமலை என்றும் வழங்கலாயின.

சென்னிமலையாண்டவர் வரலாறு

சென்னிமலைக்கு சுமார் 3 மைல் தூரத்தில் நொய்யல் ஆற்றின் கரையில் கொடுமணல் என்ற ஒரு கிராமம் தற்சமயம் இருந்து வருகிறது. இது ஒரு காலத்தில் பெருநகரமாயும், ஒரு சிற்றரசுக்கு ஆட்பட்டதாயும் இருந்து வந்ததாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். பல நூறாண்டுகளுக்கு முன்பு அந்நகரில் பண்ணையக்காரர் பண்ணையில் நூற்றுக்கணக்கான பசுமாடுகள் இருந்து வந்திருக்கிறது. தினமும் பசுக்கள் மேய்ப்பவன் பசுக்களை மேய்த்து மாலையில் ஆவினங்களை கூட்டமாக தொட்டிக்கு திரும்பி வரும்போது கராம் பசு மட்டும் சற்று தூரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில்

தன் மடியில் உள்ள பால் முழுவதும் தானாகவே சொறியவிட்டு பின் மறுபடியும் மாடுகள் கூட்டத்தில் சேர்ந்து வருவதை சில நாட்கள் கவனித்து விட்டு, அந்த குறிப்பிட்ட இடத்தில் மண்ணை தோண்டி பார்க்கச் செய்தார்.

சுமார் 5 அல்லது 6 அடி ஆழம் தோண்டியதும், எல்லாரும் அதிசயிக்கத்தக்க பூர்ண முகப்பொழிவுடன் ஒரு கற்சிலை தென்பட்டது. பண்ணையார் புளங்காகிதம் அடைந்து தன்னை ஆட்கொண்ட இறைவனே வந்து விட்டதாகக் கூறிக் கொண்டு விக்ரவரத்தை எடுத்து அதன் முகப்பொழிவில் ஈடுபட்டு மெய்மறந்திருந்தனர்.

பின் விக்ரஹத்தை ஆராய்ந்த போது விக்ரஹத்தின் இடுப்புவரை நல்ல வேலைப்பாட்டுடன் முகம் அதி அற்புதப் பொழிவு இருக்க இடுப்புக்கு கீழ் பாதம் வரை சரியான வேலைப்பாடில்லாமல் கரடுமுரடாக இருப்பதை அவர் ஒரு குறையாக எண்ணி அந்த பாகத்தையும் சிறந்த சிற்பியைக் கொண்டு உளியினால் வேலை துவங்கும் சமயம் இரத்தம் பீறிட்டது. இதை கண்ணுற்ற எல்லோரும் பயந்து மேற்கொண்டு சுத்தம் செய்வதை நிறுத்திவிட்டார்கள். பக்கத்திலுள்ள குன்றின்மேல் ஒரு சிறிய ஆலயம் எழுப்புவித்து இந்த சிலையை பிரதிஷ்டை செய்தனர். அதுவே சென்னிமலையின் பேரில் தண்டாயுதபாணி மூர்த்தமாக ஆட்சிப்பீடத்தில் வீற்றிருப்பதாயும். இப்போதும் திருமுகப் பூரணப் பொழிவுடனும் இடுப்புக்குக் கீழே வேலைப்பாடற்றும் இருப்பதை இன்றும் காணலாம்.

### பின் நாக்குச் சித்தர்

18 சித்தர்களுள் ஒருவரான புன் நாக்குச்சித்தர் வாழ்ந்து முக்தி அடைந்த தலம். பொய் சொன்ன நாக்கு புன்நாக்கு எனப் போதித்து வந்தார். நாக்கினை பின்பக்கமாக, மடித்து அருள் வாக்கு வழங்கி வந்ததால் பின்நாக் குச்சித்தர் எனவும் அழைக்கப்பட்டார். இவர் தவமிருந்த குகை ஒன்றும் உள்ளது.

### ஸ்ரீகந்தர் சஷ்டி கவசம் அரங்கேற்றம்

உலகில் உள்ள முருக பக்தர்கள் யாவரும் நாள்தோறும் மனம் உருகி பாராயணம் செய்யும் ஸ்ரீகந்தர் சஷ்டிகவசம் இயற்றிய ஸ்ரீபாலன் தேவராய சுவாமிகள் காங்கேயம் அருகில் மடவளாகம் என்னும் ஊரைச் சார்ந்தவர். இவர் மைசூர் தேராச உடையாரின் காரியஸ்தரில் ஒருவர். முருகனை நினைந்து வேண்டிய காலத்தில் அரங்கேற்றம் செய்ய உரிய ஆலயம் சென்னிமலை தான் என்பதை அருளால் உணர்ந்து அரங்கேற்றம் செய்தார்.

> **“துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்**
> **நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்**
> **கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும் நிமலர்**
> ***அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை”*[16].**

இக்கோயிலில் வளர்பிறைசஷ்டி, ஐப்பசி மாதம் கந்தர் சஷ்டி திருவிழா 6 நாட்களிலும் பக்தர்கள் தொன்றுதொட்டு விரதமிருந்து வரும் நோன்பு, சஷ்டித்திருநாளில் குழந்தை வரம் வேண்டுவோருக்கு குழந்தைப் பேறு அருள்வது கண்கூடு.

சென்னிமலை ஆண்டவர் செவ்வாய் கிரகமாக அமைந்தும் மூலவரைச் சுற்றி நவக்கிரகங்களில் எட்டு கிரகங்களும் அமைந்துள்ளது. மூலவரை வலம் வந்து வணங்கினாலே நவக்கிரகங்களையும் வணங்கி வழிபட்ட பலன் உண்டு.

சென்னிமலை ஆண்டவரின் அம்பாள் அருள்மிகு வள்ளி தெய்வானை திருக்கோயில் முருகன் சந்நிதிக்கு பின்புறம் படிக்கட்டுகள் வழியாக சென்றால் தேவியர் அமிர்தவல்லி, சுந்தரவல்லி, என்ற பெயர்களுடன் ஆண்டவரை திருமணம் செய்ய தவம் செய்யும் காட்சி வேறு எங்கும் காணமுடியாத சிறப்பாகும். ஒரே கல்லில் வள்ளி தெய்வானை திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும். முருகன் பழத்திற்காக கோபித்து பாலகனாக மலைமேல் உள்ளதால் தண்டாயுதபாணி தனியாகவும் வீற்றிருக்கின்றார்.

### மாமாங்க தீர்த்த மகிமை

ஒவ்வொரு பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மிகவும் வறட்சியான கோடை காலத்தில் சிறிதேனும் மழையில்லாத கொடூரமான நேரத்தில் மலைக்கோயிலுக்கு தென்புறம் அமைந்துள்ள மாமாங்க தீர்த்த விநாயகர் முன்பு திடீரென பொங்கி வழிந்தோடும் மாமாங்கத் தீர்த்தமானது அதிசயம் நிறைந்த தெய்வீகச் சிறப்பாகும். கடந்த 1988-2000 மற்றும் 2012, ஆண்டுகளில் மாமாங்கத்தீர்த்தம் தானாகவே பொங்கி வழிந்து சிறப்பு பெற்றுள்ளது.

இங்கு சிரசுப்பூ உத்தரவு கேட்டல் என்பது வீடுகள் கட்டவும், திருமணங்கள், கிணறுகள் வெட்ட, புதிய வியாபாரங்கள் செய்ய வியாபாரத்தில் கூட்டுச் சேர்த்தல், புதிய தொழில் துவங்குதல் அனைத்துக்கும் சிரசுப்பூ உத்தரவு கிடைக்காவிட்டால் குறிப்பிட்ட செயல்களை பக்தர்கள் தவிர்ப்பதும்வழக்கமாகக்கொண்டுள்ளனர். ஆண்டவருக்கு திருமஞ்சனத் தீர்த்தம் 1320 திருப்படிகள் வாயிலாக மலைக்கு பொதிகாளைகள் மூலம் தினசரி அடிவாரத் தில் இருந்து மலைக்கு கொண்டு செல்லும் சிறப்பு தமிழ்நாட்டின் வேறு எங்கும் இல்லாதொரு தனிச்சிறப்பாகும்.

உலகமே வியக்கும் வண்ணம் அதிசயத்திலும் அதிசயமாக கடந்த 12.2.1984 அன்று இரட்டை மாட்டு வண்டி 1320 திருப்படிகள் வழியே மலையேறிய அதிசயம் நடந்தேறியது. பாரதநாடு முழுவதும் 10 லட்சம் பக்தர்கள் முதல்நாள் இரவே மலை நகரம் முழுவதும் நிறைந்து கண்டு ரசித்தனர்.

### அருணகிரிநாதர்

ஸ்ரீஅருணகிரிநாதர் திருப்புகழ் பாடி மகிழ்வித்து முருகப்பெருமானிடம் படிக்காசு பெற்ற திருத்தலம்.

**“சிரிகிரியமர்ந்து வாழும் முருகோனே**
**திமிலை தவிற்றும் துமிகள் முழக்கும்**
**சிரிகிரி நிற்கும் பெருமானே”[17]**

**(அருணகிரிநாதர்)**

### சென்னிமலை ஆண்டவர்

சென்னிமலை என்ற மலையின் பெயரே அதன் அடிவாரத்தில் உள்ள ஊருக்கும் வழங்கலாயிற்று. மலையின் பரப்பு சுமார் 1700 ஏக்கர்கள் மலை உச்சி கடல் மட்டத்திலிருந்து 1748 அடி உயரம் மலைப்பாதை யாவரும் எளிதில் ஏறிச் செல்லுமாறு அமைந்திருக்கிறது. மலையின் தென்புறம் இமயன் வழிபட்ட செவ்வந்தீஸ்வரர் கோயில். மலையின் கன்னிமூலையில் இந்திர விநாயகர் கோயில், ஊர்சிவன் கோயிலுக்கு மேற்கில் பெருமாள், வடமேற்கு நர்த்தவிநாயகர் கோயில், துர்க்கை, காமாட்சியம்மன் அக்னி திசையில் மாரியம்மன் கோயில், தெற்கில் செங்கழுநீர்ப் பிள்ளையார் இவைகளுக்கு நடுநாயகமாகக் கைலாயநாதர் கோயில் அமைந்துள்ளது.

மலைமேற் செல்லும் பாதையால் அடிவாரத்தில் காண்பது மயில் வாகனக் கொறடு, விஜயபுர மன்னர் கட்டினார். முடிபிராத்தனை முகப்பில் இரண்டு யானை பொருத்தப் பெற்ற இந்திர விநாயகர், செங்கழுநீர் பிள்ளையார் கோயில் இருக்கின்றது.

மலையின் சிலப்படிகள் ஏறியவுடன் கடம்பனேஸ்வரர் கந்தர், இடும்பன் ஒரே வரிசையில் அமைந்த சந்நிதிகளை காணலாம். சற்று மேலே சென்றதும் வள்ளியம்மன் பாதம், இதை கடந்து சென்றால் முத்துக் குமார சாவான் என்னும் மலைக்காவலர் சந்நிதி இருக்கிறது. கோயிலுக்கு மேலே ஆற்றுமலை விநாயகர் சந்நிதியுள்ளது. இக்கோயிலுக்கு மேலே சிறிய நீண்ட இலைகளுடன் கூடிய துரட்டி மரம் இருக்கிறது. இதைத் தாண்டிச் சென்றால் சென்னிமலை ஞான தண்டாயுதபாணி எழுந்தருளியுள்ள திருக்கோயில் காட்சியளிக்கிறது. வாயில் கடந்து உள்ளே நுழைந்ததும் எதிரில் தோன்றுவது பாரவேல், மார்க்கண்டேஸ்வரர் இமையவள்ளியின் சந்நிதியும், தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும், வடக்கு திருச்சுற்றில் காசிவிசுவநாதர், விசாலாட்சியம்மன்

சந்நிதிகளும் இருக்கின்றன. சந்தானகரணி என்னும் சித்திப் பொருள் இருப்பதாக சான்றோர் கூறுவர். இங்கு மாவிளக்கு ஏற்றினால் புத்திரப்பேறு கிடைக்கும்.

இவைகளின் நடுவே சென்னிமலையாண்டவரின் திருச்சன்னதி சிறந்து விளங்குகின்றது. ஞானதண்டாயுதத்தை வலது திருக்கரத்தேந்தி. இடது திருக்கரம் இடுப்பிற் பொருத்த பேரழகும், பேரொளியும், பெருங்கருணையும் ஒருவடிவெடுத்த தென் சென்னிமலை ஆண்டவன் பக்தர்களுக்கு எழிற்காட்சி தந்தருளுகின்றான்.

**செஞ்செவித் துணையுஞ் துணைமலர்க்கண்ணுந்**
**திகபனி வதனமும் பின்றாழ்**[18]
**(சென்னிமலை தலபுராணம்)**

சென்னிமலை ஆண்டவர் நான்கு யுகங்களில், மஹாவிஷ்ணு, மஹாலட்சுமி, துர்க்காலட்சுமி, தேவேந்திரன் ஆகியோரால் பூஜிக்கப்படும் நான்கு பெயர் கொண்ட மலையாகவும் நான்கு விருட்ஷம், நான்கு தீர்த்தம், நான்கு மூர்த்திகளாகவும் காட்சியருளினார்.

## திருவிழா

இக்கோயிலில் வருடாந்திர திருவிழா தைப்பூசத் தேர்த்திருவிழாவாகும். தமிழ் வருடப் பிறப்பு, சித்ரா பௌர்ணமி வைகாசி விசாகம், ஆடி அமாவாசை, ஆடி கிருத்திகை, நவராத்திரி, கந்தர் சஷ்டி சூரசம்ஹாரம், திருக்கார்த்திகை மாசிமகம், பங்குனி உத்திர ரத உலா என பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் வருகை தருவார்கள்.

## வடசென்னிமலை

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள இக்கோயில் சுமார் 300 ஆண்டுகள் பழமையானது. வடமறை என்ற ஊரைச் சேர்ந்தவர் அப்பன்சுவாமிகள் வைணவத்தின் மீது அதீத பற்று கொண்டவர். இருப்பினும் வடசென்னிமலையில் சுயம்புவாகக் காட்சி கொடுத்த முருகன் மீது அளவு கடந்த பற்று வைத்திருந்ததால் தான் போற்றி வணங்கும் முருகப் பெருமானுக்குக் குழந்தை உருவச் சிலை ஒன்றை பிரதிஷ்டை செய்யப் பிரியப்பட்டார். அப்பன்ன சுவாமிகள், அதற்காகக் காஞ்சி மகாபெரியவரிடம் சென்று ஆலோசனை கேட்டார். மகாபெரியவரும் திருவண்ணாமலை, ரமணர் ஆசிரமத்தில் வைத்தியநாத சிற்பி என்றொருவர் இருக்கிறார். அவரிடம் போய் சொல்! உனக்குப் பாலகன் சிலையை வடித்துக் கொடுப்பார் என்று சென்னார்.

## வடசென்னிமலை ஆண்டவர் சிலை

சஞ்சலமான அப்பன்ன சுவாமிகள் அப்போதே அப்பன் சுவாமிகள் திருவண்ணாமலை சென்றார். வைத்தியநாத சிற்பியையும், சந்தித்தார். சிற்பிக்குப் பார்வையும் தெரியாது. வாய் பேசவும் வராது என்பது அப்புறம்தான் தெரிந்தது. கண் தெரியாதாவர் எப்படிச் சிலை வடிப்பார் என்ற சந்தேகப்பட்ட அப்பன்ன சுவாமிகள். ஒருவேளை காஞ்சிப் பெரியவரின் சோதனையா இது என்று நினைத்து சஞ்சலமானார். எது நடந்தாலும் சரி என முடிவுக்கு வந்தார். குழந்தை வேலன் சிலையை வடித்துத் தருமாறு வைத்தியநாத சிற்பியிடம் உரக்க வேண்டினார். அதற்கு, சைகையால் சம்மதம் தெரிவித்த சிற்பி, ஏழு நாட்கள் கழித்து மீண்டும் வந்தார். அற்புதமான குழந்தை வேலன் சிலையை அழகாக வடித்து முடித்திருந்தார் சிற்பி. இது எப்படி சாத்தியமானது என வியந்து நின்ற அப்பன்னசுவாமிகள் அதனை எடுத்துச்சென்று வடசென்னிமலை முருகன் கோயிலில் பிரதிஷ்டை செய்தார்.

## முருகன் சிறப்பு

வடசென்னிமலை முருகன் கோயில் முருகனை முப்பரிமாணங்களில் பார்த்து தரிசிக்கலாம். அத்தகைய அற்புதத் திருத்தலம் ஆகும். பாலகனாகவும், வள்ளி தெய்வானையுடன் திருமணக் கோலத்திலும், முதிர்ந்த பருவத்து

தண்டாயுத பாணியாகவும், முருகப் பெருமான் காட்சி கொடுக்கும் அபூர்வத் தலம் இது.

## தல பெருமை

கருவறையில் காட்சி தரும் பாலசுப்பிரமணியர் குழந்தை வடிவில் மேற்கு நோக்கியபடி சிரித்த கோலத்திலும் அருகிலுள்ள தண்டாயுதபாணி துறவற கோலத்திலும், உற்சவர் வள்ளி, தெய்வானையுடன் கிரகஸ்த நிலையிலும் (குடும்பம்) காட்சி தருகிறார். பவுர்ணமியில் கிரிவலம் சென்று வணங்க தீமைகள் விலகும் என்பது நம்பிக்கை.

இங்குள்ள தண்டாயுதபாணி கழுத்தில் ருத்ராட்ச மாலையுடன் தலைப்பாகை அணிந்து காட்சி தருகிறார். நடுமலையில் இடும்பன் சன்னதியும், அதனருகில் நெல்லிக்கனியை முருகனுக்கு அவ்வையார் வழங்கிய காட்சியை விவரிக்கும் சிலையும் உள்ளது.

இவ்விடத்தில் பக்தர்கள் வீடுபோல கற்களை குவித்து வைக்கின்றனர். இவ்வாறு செய்வதால் வீடுகட்டும் பாக்கியம் பெறலாம் என நம்புகின்றனர். சன்னதிக்கு செல்லும் படிக்கட்டுகளில் அறுபது வருடங்கள் குறிக்கும்படியாக படிகள் பிரிக்கப்பட்டுள்ளது. இதனை பூஜை செய்தால் ஆயுள் அதிகரிக்கும்.

## தல வரலாறு

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் சில சிறுவர்கள் ஆடுகளை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த சிறுவன் ஒருவன் அவர்களுடன் விளையாட்டில் சேர்ந்து விளையாடினான். சிறிது நேரம் கழித்து திடீரென ஒன்றும் சொல்லாமல் குன்றின்மீது வேகமாக ஏறினான். சிறுவர்களும் விளையாட்டுக்கு கூடவே ஏறினர். ஓரிடத்தில் நின்ற அச்சிறுவன் பேரொளி தோன்ற அதன் மத்தியில் மறைந்துவிட்டான். உடனே சிறுவர்கள் வந்து ஊர் மக்களிடம் கூறினர். மக்கள் வந்து அங்கு பார்த்தபோது சிறுவன் மறைந்த இடத்தில் மூன்று சுயம்பு சிலைகளுடன் அவ்விடத்தில் பூஜை செய்ததற்கான அடையாளங்களும் இருந்தன. சிறுவன் தான் முருகனை என்பதை அறிந்து அவ்விடத்தில் கோயில் கட்டினர்.

மூலவர், பாலசுப்பிரமணியர், உற்சவர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, வஷிஸ்ட தீர்த்தம் கொண்டு இக்கோயிலில் காமீகம் முறைப்படி பூஜைகள் காலை 6 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் 6 மணிவரையும் பூஜைகள் நடைபெறும்.

## திருவிழா

பங்குனி உத்திரம், திருவிழாவோடு தேரோட்டம், சாமி ஊர்வலம் மாவிளக்கு என அங்கு சுற்றியுள்ள பல லட்சக்கணக்கான மக்கள் ஆண்டுக்கு ஒருமுறை மிகவும் விமர்சையாக கொண்டாடுகின்றனர்.

திருக்கார்த்திகை கந்தசஷ்டி, தைபூசம், சஷ்டி பௌர்ணமி என சிறப்பாக பூஜைகள் ஆகமவிதிப்படி நடைபெறுகிறது.

***ஆதிசக்தி மைந்தன் அவன்...***
***ஆத்தூரில் இளங்குழந்தையவன்***
***மலைகளின் தலைவனவன்***
***மகேஸ்வரனின் மைந்தனவன்***
***மங்கைகளின் கணவானவன்***
***மக்களின் குறை தீர்ப்பவன்***
***சக்தியின் தவப்புதல்வனவன்***
***சங்கடங்களை தீர்த்துவைப்பவன்***
***வேதங்களின் வித்தானவன்***
***வேலுக்கு சொத்தானவன்***
***ஔவையின் தமிழானவன்***
***அருணகிரியின் திருப்புகழானாவன்***
***தேனும் தினைமாவும் விரும்புவன்***
***பஞ்சாமிர்த பிரியனவன்...***
***அழகிலே மன்மதனவன்***
***அனைவரையும் ஆட்கொள்பவன்[19]***

***(த. சங்கீதா)***

என் ஆருயிர் கந்தனவன். மலைகள் தோறும் திருமாலின் மருமகனையும் அவனது திருவிளையாடல்களையும் பல்லாயிரம் ஆண்டுகளாக பாரில் உள்ள மக்கள் அனைவரையும் பாதுகாத்து குடிகள் தலைக்க குன்று தோறும் வீற்றிருந்து காப்பவன் எம்பெருமான் குமரனே! அவன் சேவடி போற்றி மகிழ்வோம்.

## முடிவுரை

உலகின்கண் நின்று நிலவும் வேத சிவாகமங்கள் அனைத்தின் சாரங்களை உள்ளடக்கிப் பரந்து காணப்படுவது வடமொழியில் ஸ்காந்தமாகும். தமிழர்களுக்கு எப்போதுமே கடவுள் பக்தி மாறாமல் இருந்து வருகிறது. தமிழர்கள் முருகனை எப்படியெல்லாம் போற்றினார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் பழைய நூல்களைப் பார்க்க வேண்டும். அப்போது நமக்கு மிக்க வியப்பு உண்டாகும். முருகனை எல்லோருக்கும்மேலாகத்தமிழர்கள்வைத்து வழிபட்டு வந்தார்கள். மலையையும், மலையைச் சார்ந்த இடத்தையும் குறிஞ்சித் திணை என்றார்கள். அக்கடவுளே குமரன் குறிஞ்சித்திணை முதல் திணை என்பது உயர்ந்து நிற்பது என்பதனால் மந்திரம் அன்று. உலகம் தோன்றும் போது முதலில் தோன்றியது மலை என்று சொல்வார்கள். மனிதனுக்கு முதலில் கடவுள் என்ற நினைவு வரும்போது அவன் முருகனாகத்தான் இருக்க வேண்டுமென்ற நம்பிக்கை தமிழர்களுக்கு இருந்ததை இது காட்டுகிறது. பூசைக்குரியவன் உச்ச ஸ்தானத்தில் இருப்பான் என்ற ஒரு வாக்கியம் உண்டு. இயற்கையாகவே உலகத்தில் உயரமான இடமாக இருப்பது மலை. அந்த இடத்திற்கு சொந்தகாரன் மலைகிழவன் என்றும் அழைக்கின்றனர். எந்தப் பொருள் விளைந்தாலும் அது முருகனுக்கே.

கொங்கு நாட்டிலே குடிகொண்ட தென்சென்னிமலை, வடசென்னிமலை இங்கு கோயில்கள் கொண்டுள்ள முருகனின் சிறப்புகள், தீர்த்தங்கள், சித்தர், கோயிலின் பெருமை சென்னிமலை ஆண்டவர் மீது மருதாசலக்கவுண்டர் பாடிய பிள்ளைத்தமிழ் உலக மக்கள் அனுதினமும் போற்றிப்பாடும் கந்த சஷ்டி கவசமும் அரங்கேறிய இடம் தலவரலாறு, புராணவரலாறு, மாட்டு வண்டு மலையேறிய நிகழ்வு, பின்நாக்குச் சித்தரின் குகை, மாமாங்கதீர்த்த மகிமை, அருணகிரிநாதர், படிக்காசு பெற்ற தலம், திருவிழா, வடசென்னிமலையின் கோயில் கொண்ட மும்மூர்த்திகளின் முப்பரிமாணங்களில் பார்த்து தரிசிக்கலாம். சிரிகிரி வேலவனை தரிசித்து பிறவிப் பெரும்பயனை அனைவரும் அடையலாம்.

## துணைநூற்பட்டியல்

1. வி.நா. மருதாசலக் கவுண்டர், சென்னிமலைப் பிரபந்தங்களும் சிவமலைப் பிரபந்தங்களும், விளாங்குறிச்சி, 1936, கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு,
2. வித்துவான். வே.ரா. தெய்வசி காமணிக்கவுண்டர், மேழிவிளக்கம், ஆசிரியர் சரவணையா, 1963.
3. தலவரலாறு, திருக்கோயில் வெளியீடு, மறுபதிப்பு, 2017.